# அதிகார ஒப்படைப்பு
# குறித்த பரிந்துரைகள்

# இயல் IV

## அதிகார ஒப்படைப்பு குறித்த பரிந்துரைகள் (இனங்கள்)

❊ ❊ ❊ ❊

### வேளாண்மை சார்ந்த விரிவாக்கம் உள்ளடங்கலாக வேளாண்மை

(இனம் - 1)

01. தமிழ்நாட்டின் வேளாண்மை வளர்ச்சி மிக சிறந்த முன்னேற்றத்தை எய்தி உள்ளது. மாநிலத்தின் மொத்த பயிர்ப்பரப்பு 71.58 இலட்சம் ஹெக்டேர் (1993 – 94) ஆகவும் பயிர் செரிவு 120.90% ஆகவும் உணவுப் பயிர் உற்பத்தி 97.42 இலட்சம் டன்னாகவும் உள்ளன. அதில் அரிசி உற்பத்தி 76.85 இலட்சம் டன்களாகும். சர்க்கரை உற்பத்தித் திறனில் நாட்டில் முதலிடம் வகிக்கிறது. (எப்போதுமே ஹெக்டேருக்கு 103 டன்னுக்கு மேல்) 1994 – 95 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி உற்பத்தி முறையே 21.28 இலட்சம் டன் மற்றும் 19.7 இலட்சம் சிப்பம் ஆகும். வேளாண்மை சில அறைகூவல்களை எதிர்நோக்கியுள்ளது.

- அதிகமான வேளாண் விளை நிலங்கள் வேளாண்மை அல்லாத பயன்பாட்டிற்கு மாற்றப்படுகிறது.
- பயிரிடத் தக்க தரிசு நிலப்பரப்பு அதிகரித்திக்கிறது. பயிரிடும் பகுதியில் வானம் பார்த்த நிலையில் உள்ள பகுதிகள் 50 விழுக்காட்டிற்கு மேல் உள்ளன.
- நீர்பாசன செரிவு 125 விழுக்காட்டிலேயே மாறாமல் உள்ளது.
- பாசன பரப்பு பெரும்பாலும் முறையானன பாசனவசதியை சார்ந்துள்ளது.
- நிலத்தடி நீரைப் பயன்படுத்தி மட்டுமே பாசன வசதியை பெருக்க இயலும்.

தோட்டக்கலை, பழங்கள், காய்கறிகள், நறுமணப் பொருள்கள், மலர்கள் மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் பயிர்செய்யும் பகுதியானது 1994 – 95 ஆம் ஆண்டில் முறையே 186 இலட்சம் ஹெக்டேராகவும், 1.75 இலட்சம் ஹெக்டேராகவும், 1.65 இலட்சம் ஹெக்டேராகவும், 0.14 இலட்சம் ஹெக்டேராகவும் மற்றும் 1.77 இலட்சம் ஹெக்டேராகவும் அதிகரித்துள்ளது. வேளாண்மை வளர்ச்சியானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தி விரைவான வேளாண்மை வளர்ச்சி அடைவதே தமிழ்நாடுவேளாண்மை கொள்கையின் முக்கிய நோக்கம் ஆகம். மானாவரி வேளாண்மை, தரிசு நில மேம்பாடு, நீர் மற்றும் நில மேம்பாடு, தோட்டப் பயிர் வளர்ச்சி, நுண்பாசன மேம்பாடு, வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை. வேளாண்மை வளர்ச்சியை நிறுவுதல், நடைமுறைக்குகந்த வேளாண்மை, பண்ணை இயந்திரமயமாக்குதல், வேளாண் கடன் வசதியை பெருக்குதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. விரிவுபடுத்தப்பட்ட வேளாண்மை விரிவாக்கம் ஒட்டு மொத்த வேளாண்மை மேம்பாட்டிற்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

02. வேளாண் வளர்ச்சி என்பது நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சியாகும். இதற்கு கிராம உள்ளாட்சிகள் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகம், நிதி நிறுவனங்கள், அரசு சார்பற்ற அமைப்புகள் மற்றும் விவசாயிகள் ஆகியோரின் ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் தேவைப்படுகின்றன. வேளாண் துறையானது தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வருவாய், கால்நடை, வனம், சுற்றுச்சூழல் மற்றும் நீர்பாசனம் ஆகிய அரசின் பிற துறைகளின் ஒத்துழைப்புக்கும், ஒருங்கிணைப்புக்கும் தொடர்புடையதாக செயல்பட்டு வருகிறது. பல்வேறு பயிர்கள் முறையே, உணவுப் பொருட்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தோட்டப் பயிர்கள் மற்றும் நறுமணப் பயிர்கள்


ஆகியவைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை உயர்த்துவதற்கு வேளாண்மைத் துறை குறிப்பிட்ட பகுதிக்கேற்ற மற்றும் பயிர்வாரியான பல திட்டங்களை செயல்படுத்துகிறது. அத்திட்டங்கள்யாவன நடைமுறைக் கேற்ற தொழில்நுட்பம் முறைகள், நீர்மேலாண்மை, உயிரின உரம், ஊட்டச் சத்து மேலாண்மை, மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி ஒழிப்பு மேலாண்மை ஆகியவைகளை தன்னுடைய விரிவாக்கத்துறை மூலம் நடைமுறைப்படுத்துகிறது. இவைகளை அல்லாமல் பலதரப்பட்ட திட்டங்கள் முறையே விதை, உரம், பசுந்தாள் உரம் மற்றும் வேளாண்மை பொறிகளை வழங்குவது ஆகியவற்றின் மூலம் உழவர்களுக்கு உதவிபுரிகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் பல்வேறு உதவி உரங்கள் திட்டங்களான விநியோகம், பூச்சிக் கொல்லி மருந்து, மின் தெளிப்பான், டயர், மாட்டு வண்டி, சிறிய டிராக்டர், இழுவைகள், மின்அறுவடை கருவி, வேளாண் கருவிகள், சேமிப்பு கிடங்கு, தார்ப்பாலின், உயிரின் உரம், பசுந்தாள் விதை, பூச்சியை பிடிக்கும் பெட்ரோமாக்ஸ் மின்வெட்டி, எலிகளை கட்டுப்படுத்தும் இராசாயணப் பொருட்கள் போன்றவற்றை வழங்குவதற்கும் இத்துறை பொறுப்புடையதாக இருக்கின்றது.

03. மாநில அளவில் இச்செயற்பாடுகளை வேளாண்மை இயக்கம் தோட்டக்கலை இயக்கம், விதை சான்றளிப்பு இயக்கம், வேளாண் விளை பொருள், விற்பனை இயக்ககம், வேளாண்மைப் பொறியியல் துறை தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம், மற்றம் தமிழ்நாடு மாநில வேளாண் விளைபொருள் விற்பனை வாரியம் மேற்கொள்கின்றன. வேளாண்மை கல்வி மற்றும் ஆராய்ச்சியினை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கவனித்து வருகின்றது. வேளாண் கடனை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மேற்கொள்கின்றார். நாம் இங்கே வேளாண் இயக்ககம் மற்றும் தோட்டக்கலை இயக்கம் ஆகியவற்றின் செயற்பாடுகள் மற்றும் அமைப்பு முறை ஆகியவற்றைப் பற்றி பார்ப்போம். விதை சான்றளிப்பு இயக்ககத்தை பொறுத்த அளவில் முறைபடுதல் மற்றும் தொழில்நுட்ப சான்றளிப்பு குறித்து பணியாற்றுகிறது. எனவே தற்போதுள்ள நிலையை தொடர்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிக்ள பொதுவாக "நில அபிவிருத்தி மற்றும் நீர்பிடிப்புப் பகுதி மேம்பாடு" மற்றும் "சிறுபாசனம்" எனும் தலைப்புகளின் கீழ் விளக்கப்பட்டுள்ளது. வேளாண் விளைபொருள் விற்பனை இயக்ககம் ஒழுங்கு முறை அங்காடி மற்றும் சந்தைக் குழுக்கள் ஆகியவை குறித்து ஊரக, உள்ளாட்சி அமைப்புகள் செயல்திறன் குறித்து "அங்காடி மற்றும் சந்தையின் கீழ் விளக்கப்பட்டுள்ளது. அரசு ஆதரவிலான நான்கு அமைப்புகளில் இரண்டு கூட்டுறவுகளும் (மக்கள் அமைப்பு) ஒரு இணையமும், ஒரு வாரியமும் உள்ளிட்டது. ஊராட்சி ஒன்றியமும் மாவட்ட ஊராட்சியும் நேரடியாக எதிலும் தலையிடாமல் திட்டங்களை மட்டும் மறு ஆய்வு செய்வதை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

## மாவட்ட வேளாண்மைத்துறை - நிர்வாக அமைப்பு

04. மாவட்ட அளவில் வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை தொடர்புடைய அனைத்து பணிகளுக்கும் முழு பொறுப்புடையவராவர். பயிற்சி மற்றும் பயணம் உழவியல், பயிர் பாதுகாப்பு, தகவல் மற்றும் பயிற்சி ஆகியவற்றின் வல்லுநர்கள் அவருக்கு உதவிபுரிகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு துணை இயக்குநர் (விதை) மற்றும் ஒரு உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) ஆகியவர்கள் முறையே மாவட்டத்தின் விதை உற்பத்தி, விநியோகம் மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றை கண்காணிக்கின்றனர். ஒரு வேளாண் துணை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) மற்றும் ஒரு வேளாண் துணை இயக்குநர் முறையே மாவட்ட அளவில் எண்ணெய் வித்து மற்றும் உழவர் பயிற்சி மையம் ஆகியவற்றைக் கவனித்து வருகின்றனர். மண், பூச்சிக்கொல்லி, உரப்பகுப்பாய்வு ஆய்வகங்கள், வேளாண் வேதியியலர், உதவி வேதியிலர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. வேளாண்மை துணை இயக்குநர் ஒருவர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண் கொள்கை, தொடர்புடைய துறைகளுக்கிடையே திட்டமிடல் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்து அவர் பணிபுரிகிறார். வேளாண் துறையின் அமைப்பு கீழேக் கொடுக்கப்பட்டுள்ளது.


## மாவட்ட அளவில் அமைப்பு முறை




### வட்ட அளவில்

05. ஒவ்வொரு மாவட்டமும், மேலும் வருவாய் கோட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வட்டங்களை கொண்டதாயிருக்கும். ஒவ்வொரு வட்டத்தின் வேளாண் அமைப்புக்கு வேளாண் உதவி இயக்குநர் ஒருவர் தலைமை ஏற்கின்றார். அனைத்து விரிவாக்க மற்றும் திட்டச் செயலாக்க நடவடிக்கைகளை அவர் மேற்கொள்கிறார். மூன்று தொழில்நுட்ப வல்லுநர்கள் அவருக்கு உதவியாக உள்ளனர். அவர்கள் (1) உழவியல் (2) பயிர்பாதுகாப்பு மற்றும் (3) தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி ஆகியவற்றைக் கவனித்த வருகின்றனர். 5 அல்லது 6 வேளாண்மை அலுவலர்கள் ஒவ்வொரு சார் கோட்டத்திலும் பணிபுரிகின்றனர். அவர்கள் வேளாண் உதவி அலுவலர்களின் பணிகளை மேற்பார்வையிடுகின்றனர். மாநிலம் முழுவதும் 159 சார்கோட்டங்கள் உள்ளன.


### அமைப்பு முறை - வட்ட அளவில்



**வட்டார அளவில் (ஊராட்சி ஒன்றியம்)**

06. வளர்ச்சி வட்டாரம் தேசிய விரிவாக்கம் பணித்தல் விரிந்துரைக்கப்பட்டவாறு நிருவாக ரீதியிலும் இடஞ்சார்ந்த முறையிலும் தமிழ்நாடு **1958** முதல் **1994** ஆம் ஆண்டு உள்ளாட்சி சட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்துடன் இணையானதாக உள்ளது. தேசிய விரிவாக்க சேவை பணிகள் ஊராட்சி ஒன்றியங்களலேயே நடைமுறைப்படுத்தப்பகின்றன. வட்டார அளவில் வேளாண் வளர்ச்சியினை ஒரு வேளாண் வளர்ச்சி அலுவலர் மேற்கொள்கிறார். இவரே தன் கீழ் பணிபுரியும் அலுவலர்களுக்கு சம்பளம் மற்றும் இதர நிதி சம்பந்த மானவைகளைப் பெற்று தரும் அலுவலராகவும் இருக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் மூன்று வேளாண் அலுவலர் (பயிற்சி மற்றும் பயணம்) விதை உதவி அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் கள விளக்க அலுவலர் அவரின் கீழ் பணிபுரிகின்றார்.

**அமைப்பு முறை - வட்டார அளவில்**




07. இம்மாநிலத்தில் பழங்கள், காய்கறிகள், நறுமணப் பொருள்கள், பூக்கள் மற்றும் மலைத்தோட்டப் பயிர்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் தோட்டக்கலை மற்றும் மலைத் தோட்டப் பயிர்த்துறையானது முக்கிய பங்கு வகிக்கின்றது. தோட்டகலைத் துறையானது மேற்குமலைத் தொடர்ச்சி மலைமேம்பாட்டு திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாடு திட்டம், சொட்டு நீர்பாசன செயல்முறை விளக்கம், பசுமைக் குடில்கள், காளான் வளர்ப்புத் திட்டம், வணிகமுறை மலர்செடித் திட்டம் போன்ற மத்திய மற்றும் மாநில அரசு தொடர்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாவட்ட அளவில் அனைத்துப் பணிகளையும் ஒரு தோட்டக் கலை உதவி இயக்குநர் கவனித்து வருகிறார். அவருக்கு உதவியாக தோட்டக்கலை உதவி அலுவலர்கள் பணிபுரிகின்றனர். மொத்தம் **54** அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை மாவட்ட அளவில் இயங்குகின்றன. அவைகளைத் தோட்டக்கலை அலுவலர்கள் கவனித்து வருகின்றனர். அரசு தற்போது சில குறிப்பிட்ட பழங்கள், காய்கள், பூக்கள், நறுமணப் பொருள்கள் ஆகியவைகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஊராட்சி ஒன்றியங்களை கண்டறிந்துள்ளது. மாற்றியமைக்கப்பட்ட அலுவலர்கள் சுருக்க முறையில் பல தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் பண்ணை செயல்முறை அலுவலர்கள் ஆகியோர்களின் எண்ணிக்கை தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

08. இம்மாநிலத்தில் வேளாண் வளர்ச்சியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு. அண்மையில் செய்யப்பட்ட அரசியல் சட்டத் திருத்தம் மற்றும் அவ்வமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொள்கையில், இன்றியமையானதாக உள்ளது. வேளாண்மை மற்றும் தோட்டக் கலை வளர்ச்சி ஆகிய திட்டங்களைச் செயல்படுத்துவதில் இவற்றுக்கு அதிக அதிகாரங்களை வழங்கலாம். ஊரகப் பகுதிகளில் மற்றும் வேளாண்மை வாழக்கைச் சூழலில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்களை பகுதி மற்றும் குறிப்பிட்ட பயிர்த்திட்டங்களில், அரசுத் திட்ட உதவிகளுக்கான பயன்களைக் கண்டறிதல், இடுபொருள்களையும் துணைக் கருவிகளையும் கொள்முதல் செய்தல் மற்றும் அவற்றைப் பகிர்வு செய்தல் போன்ற திட்ட உருவாக்கத்தில் ஊரக

அமைப்புகள் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். கிடைக்கக்கூடிய வளங்களைப் பெருமளவு நிலம் மற்றும் நீர்ப் பயனீட்டைப் பயன்படுத்திக் கொள்வதற்காகவும், பயிர் உற்பத்தி இலக்கினை எய்தி சிறிய மற்றும் நடுத்தர, விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் ஆகியோரின் நிலையை சமூக, பொருளாதார தரம் எய்தவும் வேளாண் கடன் அளிப்பது இன்றியமையாத ஒன்றாகும். உள்ளாட்சி அமைப்புக்கு அதிகாரங்களை ஒப்படைப்பது தொர்பில் பகுப்பாய்வு செய்வதற்காகப் பின்வரும்தலைப்புகளில் வேளாண் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெறலாம்.

(அ) வேளாண் உற்பத்தியினைப் பெருக்குதல் (ஆ) வேளாண் பரப்பு மற்றும்உற்பத்தி திறனை மதிப்பீடு செய்தல் (இ) இடுபொருள்க்ளை வழங்குதல், (ஈ) வேளாண் விரிவாக்கச் செயற்பாடுகள் (உ) வேளாண் கடன் முறை (ஊ) அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை.

## (அ) வேளாண் உற்பத்தியினைப்பெருக்குதல்

09. பயிர் உற்பத்தித் திறனை உயர்த்துதல், நிலை நிறுத்தல் மற்றும் உழவர்களின் இலாபத்தை உயர்த்துதல் போன்றவை வேளாண்மைத் துறையின் அறைகூவலாக இருக்கும். இந்நிலையினை சரியான திட்டமிடல் அவசியமாகிறது. தற்போது வட்டார அளவில் வேளாண்மை பணிகளை வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் வேளாண் விரிவாக்கம் மற்றும் இதர பணிகளை செயலாக்குகின்றனர். அவருக்கு உதவியாக உதவி வேளாண் அலுவலர் (உ.வே.அ) மற்றும் பண்ணை செயல்முறை அலுவலர் (ப.செ.அ) செயல்படுத்துகின்றனர். ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் குறைந்தது ஒரு உதவி வேளாண்மை அலுவலர் (அ) பண்ணை செயல்முறை அலுவலர்கள் உழவர்களுக்கு திறம்பட உதவி செய்கின்றனர்.

## ஆ. வேளாண் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மதிப்பீடு செய்தல்

10. வேளாண்மை துறை. பொருளாதாரப் புள்ளியில் துறை மற்றும் வருவாய் துறை ஆகியவைகளின் ஒத்துழைப்புடன் பயிர் விளைச்சலை மதிப்பீடு செய்கிறது. வட்டாரத்திலுள்ள வேளாண்மை அலுவலர் அங்குள்ள வட்டார புள்ளியியல் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பயிர் அறுவடை ஆய்வு நடத்தி உற்பத்தியையும் பயிர் விளைச்சலையும் மதிப்பிடுகின்றனர். இந்த பணியில் ஊராட்சிகள் உதவ முடியும். ஊராட்சி ஒன்றியங்களின் உதவியை பயிர்ப்பகுதி மற்றும் விளைச்சல் ஆகியவற்றை மதிப்பீடு செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம். மாவட்ட ஊராட்சியானது பயிர் விளைச்சல் போட்டிக்கு ஏற்பாடு செய்து குறிப்பிட்ட பயிர்களை அதிக மகசூலைப் பெற்றிருக்கின்ற சிறந்த விவசாயிகளுக்கு பரிசுகளை வழங்கும்.

## இ. இடுபொருள்களை பகிர்வு செய்ய ஏற்பாடு செய்தல்

11. உற்பத்தியைப் பெருக்குவதற்கு நேரத்துடன் உழவர்களுக்கு இடுபொருள்கள் வழங்க வேண்டியது இன்றியமையாததாகும். தற்போது இடுபொருள் முறையே விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் பசுந்தாள் உரங்கள் ஆகியவைகளை பல்வேறு முகமைகளால் வழங்கப்படுகின்றன. இடுபொருள் வழங்குவதில் உள்ள சில சிற்றப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### விதைகள்

12. நல்ல தரமான உயர்வகை உற்பத்தி தரக்கூடிய விதைகள் தயாரிப்பதற்கு உயர்ந்த தொழில்நுட்ப அறிவு அவசியம். தமிழ்நாடு வேளாண்மை பல்லைகலைக் கழகம் ஆதார விதைப்பெருக்க உற்பத்தியை மேற்கொள்கின்றன. ஆதார விதை 1 மற்றும் 2, 44 அரசு பண்ணைகள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆதார விதைகளை பயன்படுத்திய விவசாயிகளின் வயல்களில் சான்று பெறப்பட் விதைகள் உற்பத்தி

செய்யப்படுகின்றன. தரமான விதைகள் அரசுக்குச் சொந்தமான விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. விதை சுத்திகரிப்பு நிலையங்கள் (16 பெரிய 3 நடுத்தர மற்றும் 51 சிறிய நிலையங்கள்) வருட கொள்ளவு 28,000 டன் ஆகும். எனவே விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டு வேளாண் விரிவாக்க மையங்கள் (கிடங்கு) மூலம் உழவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 1995 – 96 ஆம் ஆண்டு எய்தப்பட்ட விதைப் விநியோகம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(டன்னில்)

| | பயிர் | 1995 - 96ம் ஆண்டு வழங்கப்பட்ட விதை அளவு |
|---|---|---|
| 1. | நெல் | 19781 |
| 2. | சிறு தானியங்கள் | 409 |
| 3. | பயறு வகைகள் | 1892 |
| 4. | பருத்தி | 359 |
| 5. | எண்ணெய் வித்துக்கள் | 8309 |
| | மொத்தம் | 30750 |

## உரங்கள்

13. வேதியியல் சார்ந்த உரங்களைப் பயிர் வளர்ச்சியின் பல்வேறு பருவங்களில் சரியான அளவு மற்றும் சரியான நேரங்களில் இடுவதால் முழுமையான உற்பத்தித் திறனை அடைய முடியும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையின் ஒரு பகுதியாக இயற்கை மற்றும் உயிரியல் உரங்களை பயன்படுத்த ஊக்கப்படுத்தப்பட்டது. வேதியியல் சார்ந்த உரங்களின் நுகர்வு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

( இலட்சம் டன்களில் )

| வ. எண் | இனம் | 1993 - 94 | 1994 - 95 | 1995 - 96 |
|---|---|---|---|---|
| 1. | தழை | 4.44 | 4.56 | 4.18 |
| 2. | மணி | 8.61 | 1.80 | 1.42 |
| 3. | சாம்பல் | 2.06 | 2.39 | 1.96 |
| | மொத்தம் | 8.11 | 8.75 | 7.56 |

## பூச்சிக் கொல்லிகள்

14. தமிழ்நாட்டில் பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்கள் குறித்து முறையாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. களப்பணி புள்ளி விவரங்கள் வாரந்தோறும்7356 இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன. புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு உரிய எச்சரிக்கைகள் வழங்கப்படுகின்றன. அரசாணை எண். 150 வேளாண்மை (தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்) துறை நாள் 9.3.93ல் தேசீயத் திட்டங்கள் ஒருமித்த பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்துதல் மற்றம் இயற்கை இடர்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படுவது தவிர்த்து மாநிலம் முழுவதிலும், பூச்சிக் கொல்லிகளை விற்பனை செய்யக் கூடாதென வேளாண்மை இயக்குநர் ஆணையிடப்பட்டுள்ளார்.

மேலும், பயிர் பாதுகாப்பு பூச்சிகொல்லிகள், கூட்டுறவு அமைப்புகளான தமிழ்நாடு கூட்டுறவு விற்பணை இணையம். தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம், ஆரம்ப வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகங்கள் ஆகியவற்றால் விற்பனைச் செய்யப்படுதல் வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. இருப்பினும் இம்மாநிலம் முழுவதும் வேளாண்மை துறையானது ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு மேலாண்மையினை நெல், பருத்தி மற்றும் கரும்பு ஆகிய பயிருக்கு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

## ஈ வேளாண்மை விரிவாக்கம் மற்றும் உழவர் பயிற்சி

15. வேளாண்மையில் அடையப்பெற்ற இப்போதைய வளர்ச்சிகளை கிராம அடிப்படையிலான பயிற்சித் திட்டங்கள் செயல் விளக்க கூட்டங்கள், பண்ணை செய்தி மடலை வெளியிடுதல், திங்கள் செய்தி மடல்கள், விவசாயிகள் தொகுதி முறை கலந்துரையாடல்கள், உழவர் சுற்றுலா மற்றும் உழவர் விழா போன்றவற்றின் வாயிலாக விவசாயிகளுக்கு தொழில் நுட்ப இயல் சார்ந்த பயிற்சியை அளிப்பதே வேளாண்மை விரிவாக்கத்தின் நோக்கமாகும். கிரிசி விஞ்ஞான கேந்திரா மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம் அல்லாமல் மொத்தம் 12 மாவட்டங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு உழவர் பயிற்சி நிலையமும் 22 கிராமம் சார்ந்த பயிற்சியும், 10 உழவர்கள் ஆலோசனை நடத்தும் அமைப்பாளர் பயிற்சியும், பல்வேறு திறன்களின் மீது 110 இடைநிலை செயல்விளக்க சுற்றுப்பயிற்சியும் நடத்தப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக 1995 ஆம் ஆண்டு ரூ. 13.57 இலட்சம் செலவிடப்பட்டது. 1995 – 96 ஆம் ஆண்டின் இலக்கு மற்றும் சாதனை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | பொருள் | 1995 - 96 ஆம் ஆண்டின் | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை |
| 1. | பண்ணையில் பணியாற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான கிராம அடிப்படையிலான பயிற்சி | 264 | 259 |
| 2. | உழவர் விவாத குழு அமைப்பாளர்களுக்கான கிராம அடிப்படையிலான பயிற்சி | 120 | 151 |
| 3. | இடைநிலை செயல் விளக்கம் மற்றும் சுற்று பயிற்சி | 320 | 1311 |

பொதுவாக வேளாண் விரிவாக்கப் பணி மேம்பட்ட வேளாண் தொழில்நுட்பத்தை உழவர்களுக்கு எடுத்துச் சொல்லுதல், இடுபொருள் வழங்குதல், உழவர் பயிற்சி, செயல்முறை விளக்கம், ஆராய்ச்சியைப் பின்பற்றுதல், மண்வள ஆய்வு, பசுந்தாள் உரம் ஊக்குவித்தல், உரச்செயல் திட்டம், தரக்கட்டுப்பாடு, செடிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவைகள் உள்ளிட்டதாகும். பயிற்சிக்காக உழவர்களை கண்டறிதல், இடுபொருள்களை வழங்குவதில் உதவியாக இருத்தல் ஆகிய பணிகளை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்கலாம். வேளாண்மைத் துறை வேளாண் திட்டங்களை செயற்படுத்த வேண்டி வேளாண் விரிவாக்கம் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவை மீது பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும்.

## உ. வேளாண் கடன்கள்

16. குறுகிய கால மற்றும் மத்திய கால கடன் வழங்கும் நிறுவனங்கள் கீழ்க்காணும் மூன்று அடுக்கு முறையைக் கொண்டதாகும்.

1. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி (மாநில அளவில்)

2. மத்திய கூட்டுறவு வங்கி (மாவட்ட அளவில்)

3. கிராம கூட்டுறவு வங்கி (கிராம அளவில்)

பொதுவாக ஒரு கிராம கூட்டுறவு வங்கி ஒன்று அல்லது இரண்டு கிராமங்களை எல்லையாகக் கொண்டு செயல்படுகிறது. இம்மாநிலத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் இவ்வங்கியின் செயல்பாட்டு எல்லைக்குள் உள்ளன மொத்தம் 4655 கிராமக் கூட்டுறவு வங்கிகள் மாநிலம் முழுவதும் பயிர்கள் மீது குறுகிய கால கடன் மற்றம் பால் வளம், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் பல வேளாண் சார்ந்த தொழில்களுக்கு மத்திய கால கடன் வழங்கி வருகின்றன. குறுகிய, மத்திய காலக் கடன் வழங்குவதில் ஏற்பட்ட முன்னேற்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | குறுகிய கால கடன் | மத்திய கால கடன் |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 1992 – 93 | 340.86 | 45.75 |
| 1993 – 94 | 439.54 | 52.65 |
| 1994 – 95 | 561.74 | 61.97 |
| 1995 – 96 | 561.37 | 65.17 |

### ஊ. அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பம்

17. தமிழ்நாட்டில் அதிக மகசூல் தரக்கூடிய பயிர் வகைகள், தீவிர வேளாண்மை நடைமுறைகள். தொழில்நுட்ப வளர்ச்சி, ஆகியவைகள் வேளாண்மையில் உயரளவு உற்பத்தியை அடையவழி வகுத்தன. இருப்பினும் உற்பத்தி உயர்ந்த அளவு அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பம் வளர்ச்சியடையவில்லை. இதனால் நுகர்வோரும் விவசாயிகளும் எதிர்ப்பார்த்த பயன்பெற முடியாமல் போனது. அறுவடையின் போதும். அறுவடைக்குப் பின்னும் அதிக அளவு விளைச்சல்கள் விரயமாவதாக தெரியவந்துள்ளது. எனவே உள்ளாட்சி நிறுவனங்கள் அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்ப மேம்பாட்டையும், தானியப் பாதுகாப்பு இயக்கத்தையும் நடத்துவதற்கு சரியான அமைப்புகளாகும்.

18. சுருங்கக்கூறின், மாவட்ட ஊராட்சிகளிடம் (1) உரிய நேரத்தில் வேளாண் இடுபொருள்கள் கிடைக்கச் செய்தலை உறுதிப்படுத்துதல் (2) கடன் வழங்குவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல் (3) இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் இழப்புக்களை மதிப்பிடுதல், துயர் துடைப்பு நடடிவக்கைகளை உருவாக்குதல் போன்றவற்றிற்கு உதவி செய்தல் (4) மாவட்ட வேளாண் திட்டத்தை வரைதல் ஆகிய அதிகாரங்களை ஒப்படைக்கலாம். ஊராட்சி ஒன்றியங்கள் (1) பயிர் மகசூல் மதிப்பீடு – போட்டி ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல் (2) பரப்பு உற்பத்தி, நிலத்தின் தரம் முதலியவை குறித்து புள்ளி விவரங்களை தொகுக்கலாம். (3) உரிய பயிர்களை பயிரிடுவது குறித்து ஆலோசனை வழங்கலாம். (4) புதிய தொழில் நுட்ப விளக்கத்திற்கு ஏற்பாடு செய்யலாம். (5) தொழில் நுட்ப மாறுதலுக்காக ஊராட்சி, மாவட்ட ஊராட்சி மற்றும் வேளாண் வல்லுநர்கள் ஆகியோர்களிடையே தொடர்பை ஏற்படுத்தலாம். (6) இடுபொருள்களின் தேவையை கணக்கிட்டு அதனை பெற்று உழவர்களுக்கு ஊராட்சிகள் மூலம் பகிர்ந்தளிப்பதில் ஈடுபடச் செய்யலாம். (7) கடன் வழங்கு முறையை தயாரித்து கண்காணிக்கலாம் (8) மண்வள ஆய்வு மற்றும் கிடங்கு பராமரித்தல் உட்பட அனைத்து களப்பணியாளர்களின் பணிகளையும் கண்காணிக்கலாம் (9) வேளாண்மை கிடங்குகளை செயற்படுத்தலாம் மற்றும் அணைத்து வேளாண் திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். ஊராட்சிகள் – (1) பயிர் மகசூலை மதிப்பீடு செய்ய உதவிடலாம் (2) கடன் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களால் பயன்பெறுகின்ற விவாசயிகளை

கண்டறியலாம். (3) வேளாண் திட்டத்தின் கீழ் இடுபொருள்களையும் துணைக்கருவிகளையும் பகிர்வு செய்யலாம். (4) பயிர் காப்பீடு செய்யுமாறு விவசாயிகளை ஊக்கப்படுத்தலாம் (5) இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் இழப்பினை மதிப்பிடலாம் (6) உதவி நடவடிக்கைகளையும் இழப்பை சரிசெய்யும் பணிகளையும் பார்வையிடலாம்.

மூன்று அடுக்குமுறையில் ஊரகப் பகுதியில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும் அதிகாரகங்கள் பற்றிய பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது

## I. ஊராட்சி

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| வேளாண் உற்பத்தியை அதிகரித்தல் | 1. | கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டத்தை தயாரிக்க ஊராட்சிகளுக்கு உரிமைக் கொடுக்கப்படுகிறது. கிராம அளவில் பகுதித் திட்டமானது பொதுவான வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கருவாக இருக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இயற்கை வளங்களான மண், நீர், தாவர வளர்ச்சி ஆகியவற்றை செயலாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் போன்றவை நிலையான முறையில் முன்னேற்றம் அடைவதற்கான சூழ்நிலையின் முதல் கட்ட நடவடிக்கையாக இருக்கும். தனி நபர்கள் நேரடியாக விவசாயப் பணிகளை மேற் கொள்கின்றனர். தொழில் நுட்பங்களை பின்பற்றுதல், பயிர் திட்டமிடல் போன்றவை தொடர்பில் விரிவாக்க கல்வி அளிப்பது ஊராட்சியின் முக்கிய பணியாகும். கிராம பஞ்சாயத்துக்கள் எளிய வகையில் இடுபொருள்கள் கிடைக்க ஏதுவாக உள்கட்டமைப்பு வசதிகளை செய்து தரலாம். இப்போதைய வேளாண் செயற்பாடுகள், கிராம அளவில் நடைபெறும் திட்டங்கள் அனைத்து பணிகளும் ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படும் கிராமப்பகுதி திட்டத்தைச் சார்ந்து தொடர்புத் திட்டங்கள் உருவாக்குதல் வேண்டும். |

## II. ஊராட்சி

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | வேளாண் உற்பத்தியை அதிகரித்தல் | வேளாண்மை பொறுத்த வரையில் ஊராட்சி ஒன்றியமானது ஒன்றியப் பகுதியில் வேளாண்மையை மேற்பார்வையிட்டு ஊராட்சி பகுதித் திட்டத்தை ஒருமுகப்படுத்த வகை செய்யும், வேளாண்மை வளத்தைக் கருதி, விடுபாட்டையும், மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகளையும் கண்டறிந்து மண், நீர், தாவர வளர்ப்பு மற்றும் தேவைப்படும் புல் தரைகள் ஒன்றியப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்கான நீர் மற்றும் தீவனம் போன்றவற்றில் உள்ளாற்றலை முழுமையாக உணர்ந்து மேற்கொண்டு முயற்சியில் ஈடுபட வேண்டும். ஒன்றியத்தின் இச்செயற் கடமைகளை நிறைவேற்றிட இயன்ற வகையில் |

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| | | | ஊராட்சி ஒன்றிய அளவில் உள்ள வேளாண் வளர்ச்சி அலுவர்கள் விரிவாக்க அலுவலராக (வேளாண்மை) செயற்படுத்தல் வேண்டும். பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல் வேண்டும். |
| | | 2. | பல்வேறு முகமைகளுடனும், இணைந்து தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதன் வாயிலாக பயிர் மகசூல் மதிப்பீடு செய்ய உதவி செய்தல். |
| | | 3. | பயிர் பரப்பின் அடிப்படை விவரம், அப்பகுதியில் வளரும் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் ஆகிய விவரங்களை உருவாக்கிட வேண்டும். |
| | | 4. | அமைவிட தன்மைக்கு தகுந்தாற் போல உரிய பயிர்களை, பயிர் முறைகளை குறித்து ஆலோசனை வழங்குதல். |
| | | 5. | உழவர் சந்தை, உழவர் நாள், உழவர் பயிற்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல். தொழில் நுட்பங்களை அனைத்து மட்டத்திலும் கொண்டு செல்வதில் மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி ஆகியவற்றிற்கிடையே தொடர்பு ஏற்பட நடவடிக்கை எடுத்தல். |
| | | 6. | புதிய தொழில் நுட்பங்கள் குறித்து பண்ணையில் சென்று நேரில் பார்வையிடுதல் மற்றும் செயல் முறை விளக்கம் அளித்தல். |
| | | 7. | கள அளவிலான விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் (வே.அ, உ.வே.அ. மற்றும் க.செ.அ) செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல். |
| 2. | இடுபொருள்களை தேவையை மதிப்பிடுதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1. | ஊராட்சிகளுக்கான இடுபொருள் தேவைகளை மதிப்பீடு செய்து உரிப நேரத்தில் வழங்க ஏற்பாடு செய்தல். |
| | | 2. | இடுபொருள்கள் வழங்கும் முகமைகள் போதிய அளவுக்கு இருப்பு வைத்துக் கொள்ளவும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றிருக்கவும் உதவி செய்தல் மற்றும் இடுபொருள்கள் வழங்கும் முறையை பேணிக் கண்காணித்தல். |
| 3. | கடன் ஆதாரம் | 1. | வேளாண் கடன் திட்டம் தயாரித்தல், நிதி நிறுவனங்கள் உரிய நேரத்தில் கடன் வழங்க முன்னோடி வங்கியுடன் ஒருங்கிணைப்பு செய்தல். |

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| | | 2. | கடன் வழங்கு முறையை கண்காணித்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள கூட்டுறவு கடன் நிறுவனங்களை வலுப்படுத்திட உதவி செய்தல். |
| 4. | விரிவாக்க ஆதாரம் | 1. | விரிவாக்கப் பணியாளர்கள் பயணத்திற்காக திட்டமிடுதல் மற்றும் விவசாயிகளுக்கும் விரிவாக்கப் பணியாளர்களுக்குமிடையே சிறந்த தொடர்பினை உறுதி செய்தல். |
| | | 2. | திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக விரிவாக்க அலுவலர்களை கண்டறிதல். |
| 5. | மண்வள ஆய்வு | 1. | மண்வள ஆய்வுப் பணிகளை கண்காணித்தல் மற்றும் மண் வள ஆய்வுப் பணிகளுக்கான இடங்களை கண்டறிவதற்கு ஊராட்சிகளுக்கு உதவி செய்தல் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கான மண்வள வரைபடத்தை தயாரித்தல். |
| | | 2. | மண்வள ஆய்வு முடிவிற்கிணங்க மண் செழிப்பினை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு உதவி செய்தல். |
| 6. | அறுவடைக்குப் பிந்திய மேலாண்மை | 1. | கூட்டுறவு, ஒழுங்குமுறை விற்பனை மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதி உள்ளிட்ட அங்காடிகளுக்கான தேவையைக் கண்டறிதல். |
| | | 2. | உணவுப்பதனிடுதல், விவசாயிகளுக்கான அறுவடைக்குப் பிந்திய பயிற்சிகளையும், கருத்துப் பயிலகம் அளித்தல். |
| | | 3. | வேளாண் பதனிடுதல் மற்றும் வேளாண் வணிகம் ஆகியவற்றிற்கான உள் கட்டமைப்புத் தேவையை கண்டறிந்து ஏற்புடைய முகமைகளின் வாயிலாக அத்தகையை உள் கட்டமைப்புகளை மேம்படுத்தல். |
| 7. | இடர்தாங்கு மேலாண்மை | 1. | இயற்கை இடர்பாடுகள் காரணமாக ஏற்படும் பயிர் இழப்புகளை மதிப்பிட்டு நிவாரணம் சம்பந்தமான செயற்பாட்டினை கண்காணித்தல். |
| | | 3. | பயிர் காப்பீட்டுறுதி திட்டங்களை விரிவாக்க உதவுதல். |
| 8. | திட்டங்களின் செயலாக்கம் | 1. | ஊராட்சி ஒன்றிய பகுதியில் செயற்படுத்தப்பட்ட அனைத்து மாநில, மத்திய வெளிநாட்டால் உதவி பெறும் செயல்திட்டங்கள் நடவடிக்கைகள் அனைத்தையும் ஆய்வு செய்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | வேளாண்மைத் திட்டமிடுதலும் வளர்ச்சியும் | 1. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கான இடுபொருளைக் கணக்கில் கொண்டு மாவட்டத் தொலைநோக்கு வேளாண்மை திட்டம் ஒன்றினை வரைதல். |
| | | 2. வேளாண்மை பொருள்களைப் பதனிடுதல் வேளாண் பொருள்களை விற்பனை செய்தல் மற்றும் தேவைப்படும் வேளாண் உள்கட்டமைப்புகள் ஆகியவை மீது மாவட்ட திட்டமொன்றினை வரைந்து அப்பொருள் தொடர்பில் அரசுக்கு ஆலோசனை வழங்குதல். |
| | | 3. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, மாநில அரசு ஆகியவற்றின் எல்லைப் பிரிவு நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டி செயலாற்றுவதற்கான திட்டங்களை உருவாக்குதல். |
| | | 4. மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சியை ஆய்வு செய்தல் |
| | | 5. நேரத்துடன் கடன் உட்பட அனைத்து இடுபொருள்கள் கிடைக்க செய்தல். |
| | | 6. இயற்கை சீற்றம் காரணமாக ஏற்படும் இழப்பினை மதிப்பீடு செய்ய உதவுதல் மற்றும் துயர்துடைப்புத் திட்டங்களை உருவாக்குதல், மற்றும் துயர்துடைப்பு பணியில் வருவாய்த்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுத்தல். |

### நிர்வாக சிக்கல்கள்

19. தொழில் நுட்பங்களைச் செயற்படுத்துதல், பயிற்சி, செயல்முறை விளக்கம், இடுபொருள்களையும் துணைக்கருவிகளையும் கொள்முதல் செய்து பகிர்ந்தளித்தல் போன்ற அனைத்து திட்டங்களுக்கும் விவசாயிகளைக் கண்டறிதல் போன்றவை வேளாண் அலுவலர்களாலும் வட்டார வளர்ச்சி அலுவலர்களாலும் நிறைவேற்றப்டுகின்றன. இதற்கு முன்னர் வேளாண்மைச் செயற்பாடுகளுக்கு ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் வேளாண்மை அலுவலர் ஒருவர் பொறுப்பேற்றிருந்தார். நிருவாக அமைப்பு முறையில் அவர் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இருந்தார். வேளாண்மை அலுவலரின் கீழ் சில விரிவாக்க வேலைகளை செய்து வந்தனர். அதன் பிறகு நிர்வாக மற்றும் தொழில்நுட்பக் கட்டுப்பாடானது வேளாண்மை அலுவலரின் கீழ் வந்தது. அனைத்து அலுவலர்களும் பணியாளர்களும் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இப்போது பணியாற்றுகின்றனர். வேளாண்மை விரிவாக்கம், செயல்முறை விளக்கம், பயிற்சி ஆகியப் பணிகள் தொழில்நுட்பம் வாய்ந்தபடியால் அவைகளை வேளாண்மைத் துறையே தொடர்ந்து மேற்கொள்வது இன்றியமையாததாகும். பயிர் அடிப்படையிலான திட்டங்களின் கீழ் பயன்பாடு சென்றடைய வேண்டிய விவசாயிகளைக் கண்டறிதல், கொள்முதல் மற்றும் உதவியளிக்கக் கூடிய விவசாயிகளைக் கண்டறிதல், கொள்முதல் மற்றும் உதவியளிக்கக்கூடிய வகைகளைப் பகிர்ந்தளித்தல் ஆகியவைகளை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கலாம். வேளாண்மை வளாச்சி அலுவலரை அவரது பணியாளர்களுடன் ஊராட்சி ஒன்றிய மன்றத்துடன் சேர்க்கப்படுதல் வேண்டும். வேளாண் அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள்/வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வேளாண்மை சிறப்புப் பயிற்சியில் உதவி செய்வார்கள். மாவட்ட அளவில் வேளாண் வளர்ச்சி

அலுவலரின் செயற்பாடுகளை இணை வேளாண்மை இயக்குநர் மேற்பார்வை செய்தும் மறு ஆய்வு செய்தும் கண்காணிப்பார். இணை இயக்குநர் தொழில் நுட்ப அறிக்கையை அனுப்புவார். ஆனால் திட்ட ஆய்வு, கண்காணிப்பு குறித்த வேளாண் அறிக்கையை வேளாண் இயக்குநருக்கு அனுப்புவார். வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பணியாளர்கள், அறிக்கைகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுப்பப் பெறலாம். அவர்கள் தொடர்ந்து அரசுப் பணியாளர்களாகவே இருப்பர். ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அமைந்த அனைத்து வேளாண்மை திட்டங்களும் அவற்றின் பணியாளர்களுடன் ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

### நிதிச்சிக்கல்கள்

20. வேளாண் துறையானது நிதி ஒதுக்கீட்டினை மத்திய மற்றும் மாநில அரசிடம் இருந்து பெறுகிறது. இருப்பினும் பஞ்சாயத்து ஆட்சி அமைப்புகள் அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றுவது கடினமானதாகும். வேளாணமை துறையானது கீழ்காணும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கலாம் என வேளாண்மை துறை க.எண். 49274 / ப. தி / 96 –97 நாள் 7.2.97இல் தெரிவித்துள்ளது.

1. சமுதாய கதிர் அடித்தளம்
2. கழிவுநீர், சாக்கடை நீர் ஆகியவற்றை பயன்படுத்தி உள்ளூர், எரு ஆதாரங்களை பெருக்குதல்.
3. பள்ளி செல்லும் குழந்தைகளுக்குத் தென்னங்கன்றுகளை வழங்குதல்.
4. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நாற்றாங்கல் அமைத்தல்.

மேலும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறையின் 10 திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. முதல் கட்டமாக கீழ்கண்ட திட்டங்களில் ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் கண்டறியப்பட்டு பயனடைய இருக்கும் விவசாயிகளை கண்டறிந்து குறைந்த விலையில் பெறப்பட்டும் பொருட்களை விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல் வேண்டும். இச்செயற்பாட்டு நடைமுறை நிலைநிறுத்தப்படுகையில் திட்டச் செயலாக்கமானது இவ்வுள்ளாட்சி அமைப்புகளிடம் முழுமையாக ஒப்படைக்கப்படும்.

| வ.எண் | திட்டம் | 1995 - 96 ஆம் ஆண்டு நிதிச் செயலாக்கம் (இலட்சம் ரூபாயில்) |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த பயிர் வகை மேம்பாட்டுத்திட்டம் | 604.50 |
| 2. | தீவிர பருத்தி விளைச்சல் மேம்பாட்டுத் திட்டம் | 232.312 |
| 3. | தேசியப் பயறுவகைகள் உற்பத்திப் பெருக்குத் திட்டம் | 190.200 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் | 1848.222 |
| 5. | பனை எண்ணெய் வளர்ச்சித் திட்டம் | 170.657 |
| 6. | கரும்பு வளர்ச்சித் திட்டம் | 99.989 |
| 7. | முந்திரிக்கான ஒருங்கிணைந்த திட்டம் | 134.930 |
| 8. | ஒருங்கிணைந்த வெப்ப மண்டல, வறட்சிப்பகுதி பழத் தோட்ட திட்டம் | 84.62 |
| 9. | ஒருங்கிணைந்த நறுமணப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம் | 152.00 |
| 10. | தோட்டப் பயிர்களுக்கான சொட்டுநீர் பாசன முறை | 500.00 |